# துரை ரவிக்குமார் வாழ்வும் பணியும்

# Turai Ravikumar Valvum Paniyum

***சே. சரவணன்***
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழியல் துறை*
*அண்ணாமலை பல்கலைக்கழகம்*

**S. Saravanan**
*Research Scholar, Tamil Department*
*Annamalai University*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் குரலாகவும் சமூக செயல்பாட்டலராகவும், சிறந்த பாராளுமன்ற உறுப்பினராகவும், எழுத்தாளராகவும், கவிஞராகவும் எளிதாக அனைவரும் அனுக கூடிய வகையில் இருப்பவர் பாராளுமன்ற உறுப்பினர். 20-க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் 2010-ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா விருதினை பெற்றுள்ளார் பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினராக செயல்பட்டு வருகிறாற் பாராளுமன்றத்தில் தனிநபப் மசோதாக்கள் பத்துக்கும் மேற்பட்ட மசோதாக்களை நிறைவேற்றியுள்ளாள். அடிதட்டு மக்கள் (விளிம்பு நிலை மக்கள்) வாழ்வாதாரம் உயர இரவு பகலாக உழைத்து வருகிறார். இத்தகைய பன்முகம் கொண்ட எழுத்தாளர் துரை ரவிக்குமார் அவர்களின் வாழ்வும் பணியும் என்னும் தலைப்பில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.*

***முக்கியச்சொற்கள்:*** *துரை ரவிக்குமார், பாராளுமன்றம்*

## Abstract

*A member of parliament who is the voice of the poor and the poor in Tamil Nadu, a social activist, an excellent member of parliament, a writer and a poet who is easily accessible to all. He has written more than 20 books. Muthamil has received the Anna Award and has passed more than ten individual bills in Parliament. He has been working day and night to improve the livelihood of the people at the bottom (marginal level). This article has explored the life and work of such a versatile writer Durai Ravikumar.*

***Keywords:*** *Durai Ravikumar, Parliment, Award*

**Citation**

Saravanan, S. "Turai Ravikumar Valvum Paniyum" *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 3, 2023, pp. 10–13.

**துரை ரவிக்குமாரின் வாழ்வும் பணியும்**

**பிறப்பும் இளமைகாலமும்**

*ரவிக்குமார் நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி வட்டத்தில் காவிரிக்கரை கிராமமான மாங்கணாம் பட்டில் 10.06.1961ஷஇல் பிறந்தவர் பெற்றோர் துரைசாமி, கனகம்மாள், மனைவி செண்பகவல்லி, மகன்கள் ஆதவன், அதீதன்.*

**இளமைப்பருவம்**

*ரவிக்குமாரின் இளமைக்காலம் என்பது நல்ல கல்வியறிவு பெற்ற காலமாக விளங்குகிறது. கல்வியில் நல்ல நாட்டம் கொண்டவராக விளங்கினான். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம், தஞ்சாவூர் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ் பல்கலைக்கழகங்களிலும்* (M.A., B.L., Ph.D) *கல்வி பயின்று பின்பு வழக்கறிஞர் மற்றும் முனைவர் பட்டமும் பெற்றாற். கல்வி காலம் முடிந்த பின்னன், அவர் வங்கியில் ஊழியராக பணியாற்றி வந்தார்.*

***"கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்கு தகசு"***

*இக்குறளுக்கு எடுத்துக்காட்டாக அவரது வாழ்வும், கல்வியும் அமைந்தது.*

**அரசியல் பணி**

*இரவிக்குமார் அவர்கள் தமிழகத்தில் ஒரு புகழ் பெற்ற தமிழ் அறிவுசார் மற்றும் ஒரு சாதி எதிர்ப்பு ஆர்வளராக திகழ்ந்தார். பின்னர் 1990-களில் தமிழ் நாட்டில் பல புதிய எழுத்தாளர்கள் உருவாக காரணமாக இருந்தவவ். அதன் முக்கிய பங்கு தான் அவரின் நிறப்பிரிகை எனும் குறும் பத்திரிக்கை ஆகும். அதன் பின் தமிழ் நாட்டில் அரசியல் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு அரசியல் பணி அதாவது மக்கள் சேவகனாக மாறுகிறார்.*

*அதற்கு முன் சட்ட பேரவைக்கு சென்றால் பெரியதாக என்ன செய்வது விட முடியும் என்று சிலர் கேட்பது போல, அவரும் அதைத்தான் கேட்டும், சொல்லியும், நினைத்தும் கொண்டு இருந்தார். இதற்கு காரணம் தேர்தல் பாதையில் நம்பிக்கை இல்லாததே காரணம் ஆகும். பின்னர் அரசியலுக்கு தல்லப்பட்டார், பின்னர் தேர்தலை சந்தித்தே ஆக வேண்டும், என்ற நிலையால் கட்சியின் தலைமையின் அழைப்பை ஏற்று தன் வங்கிப்பணியை நிறுத்திவிட்டு 2006-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தலை சந்தித்தார். அப்போது திமுகவுடன் கைகோர்த்து விசிக நின்றது. அதில் காட்டுமன்னார் கோவில் தொகுதி ரவிக்குமாருக்கு ஒதுக்கட்டது. அதில் தனி சின்னம் பெற்று, தேர்தலில் வெற்றி பெற்றால். முதல் முறையாக சட்டமன்றத்திற்கு தேத்வாகினார். தனி ஒருவராக மக்கள் மன்றத்தில் தன் தொகுதி பிரச்சனைக்கும் மட்டும் இல்லாமல் தமிழ்நாட்டில் அனைத்து பிரச்சனைகளுக்கும் குரல் எழுப்பினார்.*

***"போர் கண்ட சிங்கம் எதைக்கண்டு அஞ்சும்"***

*என்பது போல எந்த விமர்சனங்கள், பிரச்சனைகள். அனைத்தையும் தாண்டி சட்டமன்றத்தில் தன் குரலைப் எழுப்பிக்கொண்டே இருந்தார். தன் தொகுதி முழுக்க சுற்றி வந்து மக்களின் குறைகளையும் கேட்டு அறிந்தார். அதை சரி செய்யும் பொருட்டு அனைத்தையும் செய்ய தொடங்கினார் மற்றும் பல புதிய திட்டங்களையும் ஏற்படுத்தினார்.*

***"அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், இந்நான்கும்***
***அஞ்சாமை வேந்தற்கு இயல்பு"***
***- நிறைமாட்சி பொருட்பால் 382***

*இந்த குறளுக்கு எடுத்துக்காட்டாக துறை ரவிக்குமாரின் அரசியல் பணிகள் அமைகிறது.*

**சமுதாய பணி**

*சட்டமன்ற உறுப்பினர் ஆன பின்பு அவர் தன் சார்ந்த தொகுதி மக்களுக்கும், ஒட்டு மொத்த தமிழ் சமுதாயத்திற்கும் மக்கள் மன்றத்தில் தன்னால் முடிந்தவரை என்ன என்ன செய்ய முடியுமோ, குரல்கொடுக்க முடியுமோ அனைத்ததையும் செய்துள்ளார். உதாரணமாக தன் தொகுதி மக்களின் கோரிக்கையும் பல கட்சி சார்ந்த தலைவர்கள் மற்றும் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் இவர்களின் நீண்ட நாள் கோகிக்கையுமான முட்டம்-மணல்மேடு இணைப்பு பாலம் வேண்டும் என மக்கள் மன்றத்தில் கேட்டுக் கொண்ட. அதனை ஏற்று முதல்வர் கலைஞர் சிறுத்தைகள் பாலம் கேட்கின்றனர். என்று அவருக்கே உண்டான பாணியில் ஒப்புக்கொண்டார். அறிவுப்பும் சட்டபேரவையில் செய்தார். இதனோடு சேர்த்து நாஞ்சலூர், கடவாச்சேரி பாலங்கள், சேதம் அடைந்த சாலைகள் போடவும் அறிவிப்பு பெற்றுக்கொண்டார்.*

*பெரும் வரலாற்று சிறப்பு வாய்ந்த சோழர்களால் வெட்டப்பட்ட வீராணம் ஏரியை தூர்வார வேண்டும் அதன் மண் எடுத்து அதை கொள்ளிடம் ஆற்றின் வடக்கரையை மேம்படுத்தவும் வேண்டும் என்று கூறினார். ஏனென்றால் வீராணம் ஏரியின் நீரை நம்பி பல சுற்றுவட்டாரங்கள் உள்ளன. காரணம் விவசாயம் மற்றும் சென்னை பெரு நகரமும் உள்ளது. காரணம் விவசாயம் மற்றும் சென்னை பெரு நகரமும் உள்ளது. ஆம் சென்னைக்கு ஒரு பங்கு நீரும் வீராணம் எரியின் மூலம் தான் கொண்டு செல்லப்படுகிறது. இப்படி இருக்க நாம் என்ன கைமாறு செய்யபோகிறோம் என்றும் மழை வெள்ளத்திற்கு நல்ல வடிகால், நீர் சேமிப்பும் உண்டு. இந்ததருணத்தில் அதை தூர்வாரி பாதுகாக்க வேண்டும் என்றும், இதற்கு நூறுக்கோடிக்கும் கூடுதலான மதிப்பீட்டில் இதனை செய்ய வேண்டும் என்றும் கூறி அதனையும் செய்து முடித்தார். மழைக்காலங்களால் அதிகம் சேதம் அடையும் இந்த தென்னாற்காடு மாவட்ட மக்களுக்கும் மற்றும் ஏழை மக்கள் குறிப்பாக மழையினால், வெள்ளத்தால் மிகவும் துன்பம் அடையும் கடலோர மாவட்ட மக்கள் அனைவருக்கும் கான்கிரிட் வீடு கட்டி தர வேண்டும் என்றும், கூறினார் இன்று கலைஞர் வீட என்ற தொகுப்பு வீடு கட்டிதர காரணமாக இருந்தவர் துறை ரவிக்குமார் அவர்கள் தான். இதனால் இருபத்தொரு லட்சம் மக்கள் பயன் அடைவார்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம். அமைமன்றத்தில் குரல் எழுப்பி, அதை நடைமுறைப்படுத்திய முதல்வர் அவர்களுக்கு நன்றி. தன்னுடைய தொகுதிக்கும் மட்டும் இல்லாமல் தமிழ்நாட்டில் உள்ள பிரச்சனைகளையும் எடுத்து கூறினார்.*

*நம் அண்டைய நாடான இலங்கை நாட்டில் உள்ள ஈழ தமிழர்கள் பிரச்சனைகள் பற்றியும் பேசியுள்ளார். மீனவர்கள் பிரச்சனையும் கூறியுள்ளார், அவர்களுக்கு கட்டித்தரப்படும் வீடுகள் குறைந்த செலவில் இருக்கிறது. அது அவர்களுக்கு போதுமானதாக இல்லாமல் இருக்கிறது. அந்த தொகையை உயர்த்தி வீடுகள் கட்டித்தரவேண்டும், அதனோடு சேர்த்து ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இதைபோன்று உயர்த்தவேண்டும் என்றும் கூறியுள்ளார்.*

*உடல் ஊனமுற்றோர்களுக்கு என்று தனி பள்ளிகள் அமைத்து தர வேண்டும் என்றும் கூறி, முதல் உடல் ஊனமுற்றோர் கல்வியை தனது தொகுதியில் ஏற்படுத்தியுள்ளார் மற்றும் இலங்கையில் இருந்து அகதிகளாக வரும் மக்கள் அனைவருக்கும் தமிழக அரசால் கொடுக்கும் நிதியை இரட்டிப்பாக்க வேண்டும். தமிழத்தில் கொடுக்கும் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி, சலூகைகள், பொருட்கள், அனைத்தும் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்*

***"அறன் இழுக்காது, அல்லவை நீக்கி, மனைஇழுக்கா***
***மானம் உடையது அரசு"*** *- 384*

**முடிவுரை**

*எழுத்தாளர், ரவிக்குமாரின், பிறப்பு, இளமைகாலம் அரசியல் பணி, சமுகப் பணி, இலக்கியப்பணி, சமுகப் சீர்திருத்தம், பெண்ணுரிமை, கல்வி, ஆகிய தளங்களில் இவருடைய பயணம் இன்றும் சிறப்பாக அமைந்து வருகிறது.*

**துணை நின்ற நூல்கள்**


1. *விக்கிமீடியா, துறை ரவிக்குமாரின் வாழக்கை வரலாறு (இணைய நூல்)*
2. *கடல்கொள்ளும் தமிழ்நாடு*
3. *சொல்லும் செயல் (சட்டமன்ற உரைகள்)*
4. *திருக்குறள் மூலமும் உரையும் (பாரி நிலையம்)*


**References**


1. *Biography of Durai Ravikumar at Wikimedia Commons*
2. *Tamil Nadu is surrounded by the sea*
3. *The act of speaking (legal speeches)*
4. *Tirukkural Source and Furnace (Pari Station)*